# சீவக சிந்தாமணியின் கேமசரி இளம்பகத்தின் வாழ்வியல்

*ரா. அருள் அரசன்*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவன் தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783265

**ஆய்வுச் சுருக்கம்**

*இயற்கையோடு இயற்கையாய் வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்கள் ஆவார். அவர்களது உணவு, வழக்கம் இயற்கை சார்ந்ததாக அமைகிறது. தம் வாழ்க்கை முறை பிற்கால சங்கத்தினருக்கும் வழிகாட்டும் விதமாக அறநெறியோடு வாழ்ந்தார்கள். இந்த வகையில் சீவக சிந்தாமணியில் உள்ள கேமசரியாரின் இலம்பகத்தில் உள்ள மக்களின் தெய்வ வழிபாடு, உணவு, ஓப்பனை, ஆடை, அணிகலன் போன்றவற்றை விரிவாக இந்த ஆய்வு கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச் சொற்கள்:*** *சீவக சிந்தாமணி கேமசரி இலம்பகம், உணவு, தெய்வ வழிபாடு, ஒப்பனை, ஆடை, அணிகலன்.*

## முன்னுரை

*சோழர் காலத்தில்தான் காப்பியங்கள் தோன்றின. காப்பியங்களில் வரலாற்றுச் செய்திகள் அதிகம் காணப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியங்களில் திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி 13 இலம்பசங்களைக் கொண்டது. இந்த நூல் மணநூல் என்று அழைக்கப்படுகிறது. சீவகன் ஒன்பது பெண்களை மணந்துள்ளான். இந்த வகையில் கேமசரியார் என்ற பெண்ணை மணக்கின்றான். தலைவியின் பெயராலேயே இந்த இலம்பகம் அமைக்கப்பட்டுள்ளது. கேமசரியார் இலம்பகத்தின் வாயிலாக அங்குள்ள வாழ்வியல் முறையை ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.*

## உணவு

*மனிதன் உயிர் வாழ உணவு மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. மனிதன் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. அத்தகைய நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உணவே மருந்து என்பதை நாம் புரிந்து கொண்டு அதற்கு தகுந்தார் போல் வாழ வேண்டும்.*

***யாழிசை யினவண பார்ப்ப நெல்லோடு***[1]

*என்ற முல்லைப்பாட்டு பாடல் வரிகளில் உணவு எவ்வளவு முக்கியமான ஒன்றாக கூறப்படுகிறது. மேலும் இதனை வள்ளுவர்,*

***மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது***
***அற்றது போற்றி உணின்***[2]

*என்னும் குறளின் மூலம் உணவு பற்றி கூறியுள்ளார்.*

*உண்ட உணவு செரிப்பதற்கான சிறிது நேரம் கொடுத்து உணவு உண்பவர்கள் உடலுக்கு வேறு மருந்தே இல்லை.*

## கிழங்கு

***'வள்ளி யின்னமு தும்வரை வாழையின்***
***றெளளு கிங்கனி யுஞ்சில் தந்த பின்'***

***- (கே.இ.1424)***

*வள்ளிக் கிழங்காகிய சுவையுடைய உணவையும், மலையுண்டாலும் வாழையினது ஆராய்ந்தெடுத்த இனிய பழமும் ஆகிய இவற்றுள் சிலவற்றை கொடுத்த பின்பு நீர் வாழ்கின்ற மேகத்தை ஒத்தது.*

## அரிசி

*அல்லிக்காயில் உள்ள அரிசியும் புல்லரிசியும் நிறைந்த ஐந்தமிழின் நடுவே*

*நின்று பகவனார் கூறும் நெறியிலே தோற்பதனால் திவினை அறும் என்கிறது.*

***'அல்லியும் புல்லு முண்டாங்***
***காரடி லைந்து னினறு'***

***- (கோ.இ.1464)***

*என்னும் பாடல் வரிகளில் அரிசி பற்றி கூறப்பட்டுள்ளது.*

**ஒப்பனை**

*முகம் அல்லது சிலையை அழகுபடுத்தும் ஒரு செயலை குறிப்பது ஒப்பனை.*

**ஆடை**

*மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்று ஆடை. ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்று கூறுவார்கள்.*

*அக்காலத்தில் ஆடைகள் என்பதே இல்லை. மனிதர்கள் இலை, தலைகளை வைத்து மறைத்து கொண்டு தான் வாழ்ந்தார்கள். இலக்கியங்களில் ஆடைகள் பற்றி இருந்தது. உடுக்கை, துணி, உடுப்பு, குப்பாயம் என சங்ககாலத்தில் ஆடையை குறிக்கும் சொல்லாகும்.*

***'வீடு வேண்டி விழுச்சடை நீட்டன்மெய்ம்***
***உரு கூறையின் மூடுதல் வெண்டலை'***

***- (கே.இ.பா.எ.1427)***

*உடம்பை மறைக்கும் துவர் ஊட்டின ஆடையை அணிந்து கொண்டனர் என்று இப்பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.*

***'வெண்ணிறத் துகிலி வாங்கண் வீழ்ந்துமா காநின்ற'***

***- (கே.இ.பா.எ.1433)***

*வெண்ணிற மிகுந்த ஆடையை அணிந்து இருந்தனர் என்று மேற்கண்ட பாடல் வரிகள் மூலம் அறியலாம்.*

***ஈரும் பேனும் இருந்துஇறை கூடி***
***வேறொடு நனைந்து வேற்றுஇமை நுழைந்த***
***துன்னற் சிதாஅர் துவர நீக்கி***[3]

*அக்கால மக்கள் ஈரும் பேனும் உள்ள ஆடைகளும், நைந்து போன ஆடைகளும் அணிந்து இருந்தனர் என்று பொருணராற்றுப்படை வரிகள் கூறுகிறது.*

**அணிகலன்**

*மாந்தர்கள் தன்னை ஒப்பனைப்படுத்திக்கொள்ள தலை, இடை, கழுத்து போன்ற ஆபரணங்களை அணிந்து கொள்வது அணிகலனாகும்.*

***'வானின் வழங்கும் வன்கை மணிசெய் மார்பிற்'***

***- (கே.இ.பா.எ.1412)***

***'கண்டத்தி னாவி யார்தங்***
***கடிமனை துறந்து காட்டுட்'***

***- (கே.இ.பா.எ.1434)***

***'படம்புனை தெழுதிய வடிவிற் பங்கயத்***
***தடம்பல தம்இயது தக்க நாடது'***

***- (கே.இ.பா.எ.1439)***

***'புர்க்குழற் பொன்செய் பைம்பூட்***
***புனையிழை கோல நோக்கிக்'***

***- (கே.இ.பா.எ.1439)***

*முத்துக்கள் அணிந்த மாலையையும் பெண்கள் அணியும் புழுகை என்ற அணிகலனும் முத்து வடம் என்ற அணிகலனை அணிந்திருந்தனர்.*

*மூக்கில் வைர தோட்டியும் அணிந்து இருந்தார்கள் என்று மேற்கண்ட பாடல் வரிகள் மூலம் அறியப்படுகின்றது.*

**தெய்வ வழிபாடு**

*தெய்வ வழிபாடு என்பது அக்காலத்தில் பலியிட்டு நடைபெற்றது. ஆனால் இக்காலத்தில் இதே போல் தான் சில இடங்களில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.*

***'காமன் நாகை நெறியின்கட காளைநீ***
***தீமை யுண்டெனிற செப்பென செப்பினான்'***

***- (கே.இ.பா.எ.1428)***

*தெய்வ வழிபாடுகளில் திருமால் வழிபாடு பற்றி இப்ப பாடல் வரிகளால் அறிய முடிகிறது.*

***மாயோன் மேய காடுறை உலகமும்***[4]

*மேற்கண்ட நூற்பாலை ஆராயும் போது கரிய நிறத்தை உடைய திருமால் விரும்பி தங்கி இருப்பது காடு சூழ்ந்த நிலப்பகுதியாக அமைகிறது என்பது தெரிய வருகிறது.*

***'மட்டார் பூம் பிணடி வளங்கெழு***
***முக்கூடைக்கீழ் மழலே கண்டீர்'***

*சமண முனிவர்களின் தெய்வம் அருகப்பெருமானை வணங்குகின்றனர் என்று மேற்கண்ட பாடல் வரிகளில் கூறப்படுகிறது.*

**முடிவுரை**

கேமசரியார் இலம்பகத்தை ஆராயும் போது அங்குள்ள மக்களின் வாழ்வியல் நிலை எவ்வாறு என்று அறிய முடிகிறது. அதில் வாழ்ந்த மக்கள் அரிசி, கிழங்கு போன்றவற்றை தம் உணவாக வைத்திருந்தார்கள் என்பதையும், அவர்கள் அருகதேவன், திருமால் போன்ற தெய்வங்களை வணங்கி உள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. விதவிதமான அணிகலன்களை அணிந்தும், ஆடைகள் அணிந்தும் வாழ்ந்து வந்தனர் என்றும் நம்மால் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. முனைவர் இரா.மோகன், பத்துப்பாட்டு தொகுதி - 1, முல்லைபாட்டு வ.8
2. சிவசுப்பரமணியம், திருக்குறளின் மூலமும் உரையும், குறள்.942
3. னைவர் இரா.மோகன், பத்துப்பாட்டு தொகுதி - 1, பொருநராற்றுப்படை, வ.81-82.
4. முனைவர் ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், ப.எ.10.

**துணை நூற்பட்டியல்**


1. மோகன்.இரா. முனைவர் - பத்துப்பாட்டு தொகுதி -1 முல்லைப்பாட்டு நியூசெஞ்சரி புக் ஹவுஸ் சென்னை - 600 028. பதிப்பு - 2007
2. சிவசுப்பரமணியம் எம் - திருக்குறளின் மூலமும் உரையும் பி.12, இராதாகிருஷ்ணன் காலணி, இரண்டாம் தெரு, சிவகாசி, விருதுநகர் ரோடு, திருத்தங்கல், சிவகாசி - 626 130.
3. திருஞானசம்பந்தம்.ச. முனைவர் - தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் கதிர் பதிப்பகம் 93, தெற்கு வீதி, திருவையாறு - 613 204.
4. துரைசாமி பிள்ளை.ஔவை - சீவகசிந்தமாணி திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு, திருநெல்வேலி, சென்னை.